**<u>முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், கோயமுத்தூர்</u>**

முன்னிலை: திருமதி.A.P. லதா, பி.எஸ்.ஸி., பி.எல்.,
முதன்மை தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

திங்கள்கிழமை, 23 ம் நாள், மார்ச் மாதம் 2026 ம் வருடம்.

<u>தொழிற்தாவா எண்.41/2025</u>

(CNR No.TNCB04-000104-2025)

நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள்
பாதுகாப்பு தொழிற்சங்கத்திற்காக அதன்
மாநில பொது செயாளர்
M.அன்புராஜ். ….. மனுதாரர்

~ எதிராக ~

நிர்வாகம்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை கோட்டம்)
கோவை. ….. எதிர்மனுதாரர்

இந்த வழக்கு கடந்த 17.03.2026 ம் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி. K.கன்னிகா சங்கரேஸ்வரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் :-

தீர்வம்

மனுதாரர் தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக தொழிற் தகராறு சட்டம் 1947 பிரிவு 2(K)ன் கீழ் கோவை தொழிலாளர் அலுவலர் முன்பாக ஒரு மனு தாக்கல் செய்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை கோட்டம்) கோயம்புத்தூர் என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.E.வேலு என்ற நடத்துநருக்கு (பணி எண்.13220) 2012 முதல் வழங்கப்பட வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வினை முன்தேதியிட்டு 2012 முதல் 3 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கியும், அதற்கான நாளது தேதிவரை அரியர்ஸ் உடன் சேர்த்து வழங்க வேண்டுமென்று கோரியிருந்த மனுவானது தொழிற்தாவா விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது சமரசம் ஏற்படவில்லை என்பதால் 21.11.2022 ம் தேதியில் சமரச அதிகாரி தனது சமரச முறிவு அறிக்கையை மாநில அரசுக்கு சமர்பித்தார். அதனை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு கீழ்கண்ட எழுவினாவிற்கு பதில் அளிக்க இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

G.O. (D) No.825 Labour and Employment (D-1)
Department, dated 19.11.2024.

<u>எழுவினா</u>

மனுதாரர் திரு.E.வேலு என்ற நடத்துநருக்கு (பணி எண்.13220) 2012 முதல் வழங்கப்பட வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வினை முன்தேதியிட்டு 2012 முதல் 3 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கியும், அதற்கான நாளது தேதிவரை அரியர்ஸ் உடன் சேர்த்து வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்".

2. மனுவின் சுருக்கம் :

மனுதாரர் சங்கம் தொழிற்சங்க சட்டப்படி பதிவு செய்யப்பட்டதும், எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி சார்பற்ற அமைப்பாகும். மனுதாரர் சங்கம் தொழிலாளர் நலனையும், நிறுவன நலனையும் பாதுகாக்க உறுதிகொண்டு செயல்பட்டு வரும் ஒரு தொழிற்சங்க அமைப்பாகும். எதிர்மனுதாரர் நிறுவனம் தமிழக அரசால் ஏற்று நடத்தப்பட்டு வரும் ஒரு போக்குவரத்து நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனமாக இருந்தபோதிலும், தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க தவறியும், தொழிற்சங்கம் வேறுபாடுகளை மனதில் கொண்டு ஆளுங்கட்சி தொழிற்சங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மற்ற தொழிற்சங்க செயல்பாடுகளை நசுக்குவதை ஒரு பணியாக கொண்டு, ஆளும் கட்சி அல்லாத தொழிற்சங்க உறுப்பினர்களை நடவடிக்கை என்ற பெயரில் பல்வேறு தொந்தரவுகளை கொடுத்து வந்தது.

3 . எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கி வருவது நடைமுறையிலும், ஒப்பந்தப்படியும் இருந்து வருகிறது. ஆனால் எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஊதிய உயர்வினை முறையாக வழங்கப்படுவதில்லை. மேலும், ஊதிய உயர்வு வழங்கப்படாதது குறித்து எந்த உத்தரவும் எழுத்து மூலமாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. வாழ்வாதரமான வருடாந்திர ஊதிய உயர்வினை நாளது வரை வழங்காமல் உள்ள இந்த எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் செயலானது 1947ம் அத்தியாயம் V பிரிவு 2(a)ன்படி தொழிலாளர் விரோத

நடவடிக்கையாகும். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்துவரும் தொழிலாளர்களுக்கு சர்வீசை அடிப்படையாகக் கொண்டு வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கி வருவது நடைமுறையிலும், ஒப்பந்தப்படியும் இருந்து வருகிறது. எதிர்மனுதாரர் தொழிற்தகராறுகள் சட்டப்படி ஏற்படுத்தப்படும் ஒப்பந்தங்களை மற்றும் நடைமுறையில் உள்ள சலுகைகளை தொழிலாளர்களுக்கு வழங்காமல் இருந்து வருவது 1947ம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டம் 5வது அட்டவணையில் 1(13)ல் வரையறுக்கப்பட்டுள்ள ஷரத்துப்படி ஒரு தொழிலாளர் விரோத நடவடிக்கையாகும்.

4. எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 30.09.1992 தேதியில் நெ.C1/066588/92 என்ற எண்ணின் கீழ் தொழிலாளர் துறை துணை ஆணையர் சென்னை அவர்கள் முன்பாக ஏற்படுத்தப்பட்ட தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தங்கள்படி எதிர்மனுதாரர் நிர்வாகம் அதில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வும் மற்றும் அதற்கான நாளது தேதிவரை அரியர்ஸ் உடன் சேர்த்து வழங்க கடமைப்பட்டவர் ஆவார். ஆனால் சங்க உறுப்பினர் E.வேலு-க்கு 2012 முதல் 3 சதவிகிதம் மற்றும் அதற்கான அரியர்ஸ் தொகையையும் நாளது தேதிவரை அரியர்ஸ் தொகையை வழங்கப்படவில்லை. மேலும் ஒரு தொழிலாளிக்கு ஊதிய உயர்வு தள்ளி வைக்கப்படுவதை உரிய முறையில் தெரிவிக்க வேண்டும் என ஒப்பந்த விதிகளில் கூறப்பட்டடுள்ளது. மேலும் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு வழங்கும் வருடாந்திர ஊதிய உயர்வு தள்ளி வைக்க நிலையானை விதிகள் மற்றும் ஒப்பந்த விதிகளில் எவ்வித முகாந்திரமும் இல்லாத

நிலையில் சங்க உறுப்பினருக்கு. எதிர்மனுதாரர் உதவி மேலாளர் மற்றும் நிர்வாகம் ஆகியோர்கள் மனுதாரருக்கு 2012 முதல் வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கவில்லை. நிர்வாகத்தின் இந்த செயலானது தொழிலாளர் விரோத போக்கு மற்றும் ஒப்பந்த விதிகளை மதிக்காத செயலாக உள்ளது.

5. சங்க உறுப்பினா E.வேலு பலமுறை நிர்வாகத்தை அணுகியும், கடிதம் கொடுத்தும் எதிர்மனுதாரர் நிர்வாகம் சங்க உறுப்பினருக்கு 2012 முதல் 3 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கியும் அதற்கான நாளது தேதிவரை அரியர்ஸ் தொகையையும் வழங்கவில்லை. எதிர்மனுதாரர் நிர்வாகம் சங்க உறுப்பினர் E.வேலுக்கு வழங்கப்படவேண்டிய ஊதிய உயர்வு வழங்காமல் எதிர்மனுதாரர் நிர்வாகம் காலம் தாழ்த்தி வருவது சட்டபயும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மேலும், சங்க உறுப்பினருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் சட்டப்படி வழங்கவேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வினை வழங்காததால் அவரும், அவரது குடும்பமும் பொருளாதார ரீதியாக மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி வருகிறார்கள் என்றும், எதிர்மனுதாரின் சட்டவிரோத நடவடிக்கையினாலேயே மனுதாரர் சங்க உறுப்பினருக்கு ஒவ்வொரு மாதமும் அடிப்படை சம்பளம் மற்றும் விலைவாசிப்புள்ளியில் 3% இழப்பு ஏற்பட்டு வருகிறது. இதற்கு எதிர்மனுதாரரின் சட்டவிரோத செயலே காரணம் என்பதால் சங்க உறுப்பினருக்கு கிடைக்கவேண்டிய வருடாந்திர ஊதிய உயவினை 2012 முதல் 3 சதவிகிதம் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் அதற்கான அரியாஸ் தொகையும் சட்டப்படி கிடைக்கும் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் அதற்கான அரியர்ஸ், தொகையும் எதிர்மனுதாரர் வழங்கிட உத்தரவு பிறப்பிக்குமாறும் இந்த கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :

மனு சட்டபடி நிலைக்கத்தக்கதல்ல. சங்க உறுப்பினர் E.வேலு, 13220 என்பவர் சூலூர் கிளையில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறார். சங்கஉறுப்பினருக்கு முதல் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஆய்வுபலன் வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார். சங்க உறுப்பினருக்கு 01.11.2012 ல் அடிப்படை ஊதியம் ரூ.11,395/- தர ஊதியம் ரூ.2,000/- ஊதிய விகிதம் 5200 – 20200 ன்படி வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 01.11.2013 ல் வருடாந்திர ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கும் பொழுது கீழ்கண்ட வழக்குகள் நிலுவையில் இருந்துள்ளது.

| SL. No. | Particulars | Date | Punishment details |
|---|---|---|---|
| 1 | G10/2012/09 | 19.11.2012 | Inc. P.P. 1 Year WCE |
| 2 | G8A/8/13 | 14.06.2014 | Inc. P.P. 6 months WOCE |
| 3 | G8A/4257/13 | 12.06.2014 | Inc. P.P. 3 months WOCE |
| 4 | G7/2355/12 | 25.06.2014 | Inc. P.P. 3 months WOCE |
| 5 | G8A/3482/16 | 12.01.2018 | Inc. P.P. 2 Years WCE |
| 6 | Non Qualification services days | 11/2012 to 01/2021 – total 1224.5 days | |

மேற்கண்ட வழக்கு நிலுவை காரணமாக சங்க உறுப்பினருக்கு வருடாந்திர ஊதிய உயர்வு நிறுத்தம் பின்தொடர்ச்சியுடன் 3 வருடங்களும், பின் தொடர்ச்சியின்றி 1 வருடமும் மற்றும் தகுதியில்லா பணி நாட்கள் 11/2012 முதல் 01/2021 முடிய மொத்தம் 1224.5 நாட்கள் இருந்ததால், மனுதாரருக்கு 01.02.2021 ல் 2 வருடாந்திர ஊதிய உயர்வுகள் வழங்கப்பட்டு அதன் பணப்பலன் 27.03.2021 என சரியாகவே கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரருக்கு அடுத்த வருடாந்திர ஊதிய உயர்வு 01.02.2022 ம் காலாண்டில் தகுதிகளின் அடிப்படையில் வழங்க பரிசீலனைக்கு

எடுத்துக்கொள்ளப்படும். மேலும் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியாளருக்கு எவ்வித முன் அறிவிப்புமின்றி வருடாந்திர ஊதிய உயர்வு வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளதாக கூறியுள்ளார். வருடாந்திர ஊதிய உயர்வு தொடர்பாக பணியாளர்களுக்கு 01.03.2021 ல் கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதை பெற்றுக்கொண்டு வேண்டும் என்றே இம்மன்றத்தில் தொழில் தாவாவை தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் சங்கம் கூறுவது போல எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக சட்ட விதிகளுக்கு புறம்பாகவோ, கழக நிலையாணைகளுக்கு புறம்பாகவோ, வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்கத்தோடோ, செயல்படவில்லை என்றும், சங்க உறுப்பினருக்கு வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் ஆய்வுப்பலன்கள் கழக பொது விதிகளின்படி வழங்கப்பட்டு வருகின்றது. வழக்கு நிலுவையில் உள்ளதை மனுதாரர் நன்கு அறிவார். எனவே மனுதாரர் சங்க கோரிக்கையை பரிசீலிக்க வழிவகை இல்லை என்றும் எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

7. தீர்வு காண வேண்டிய பிரச்சனை :

மனுதாரர் திரு.E.வேலு என்ற நடத்துநருக்கு (பணி எண்.13220) 2012 முதல் வழங்கப்பட வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வினை முன்தேதியிட்டு 2012 முதல் 3 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கியும், அதற்கான நாளது தேதிவரை அரியர்ஸ் உடன் சேர்த்து வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? இல்லையா?

8. சான்றாவணமும், சாட்சியமும் :

மனுதாரர் தரப்பில் மனுதாரர் திரு.E.வேலு தொ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, தொ.சா.ஆ.1 முதல் தொ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள்

குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை, மற்றும் சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

9. தீர்வு :

மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தொழிற்சங்க உறுப்பினர் திரு.E.வேலு, எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் நடத்நராக பணி செய்து வருகிறார் என்றும், 30.09.1992 ம் தேதியில் நெ.C1/066588/92 என்ற எண்ணின் கீழ் தொழிலாளர் துறை ஆணையர் சென்னை அவர்கள் முன்பாக ஏற்படுத்தப்பட்ட தொழிற்தகராறுகள் சட்டம் 12(3) ஒப்பந்தத்தின் அடிப்படையில் சங்க உறுப்பினருக்கு 2012 முதல் 3% வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் அதற்கான நிலுவைத் தொகை நாளது தேதியில் வழங்கப்படவில்லை எனவும், வழங்கப்படாதது சம்பந்தமாக சங்க உறுப்பினருக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும், எனவே, 12(3) ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2012 முதல் 3% வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் அதற்கான நிலுவைத் தொகையும், சங்க உறுப்பினருக்கு கிடைக்கக்கூடியது என்பதாக வாதுரை முன்னிலை செய்யப்பட்டது.

10. எதிர்மதனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சங்க உறுப்பினருக்கு 01.11.2012 ல் அடிப்படை ஊதியம் ரூ.11,395/- தர ஊதியம் ரூ.2,000/- ஊதிய விகிதம் 5200 – 20200 ன்படி வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 01.11.2013 ல் வருடாந்திர ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கும் பொழுது கீழ்கண்ட வழக்குகள் நிலுவையில் இருந்துள்ளது.

| SL. No. | Particulars | Date | Punishment details |
|---|---|---|---|
| 1 | G10/2012/09 | 19.11.2012 | Inc. P.P. 1 Year WCE |

| | | | |
|---|---|---|---|
| 2 | G8A/8/13 | 14.06.2014 | Inc. P.P. 6 months WOCE |
| 3 | G8A/4257/13 | 12.06.2014 | Inc. P.P. 3 months WOCE |
| 4 | G7/2355/12 | 25.06.2014 | Inc. P.P. 3 months WOCE |
| 5 | G8A/3482/16 | 12.01.2018 | Inc. P.P. 2 Years WCE |
| 6 | Non Qualification services days | 11/2012 to 01/2021 – total 1224.5 days | |

மேற்கண்ட வழக்கு நிலுவை காரணமாக சங்க உறுப்பினருக்கு வருடாந்திர ஊதிய உயர்வு நிறுத்தம் பின்தொடர்ச்சியுடன் 3 வருடங்களும், பின் தொடர்ச்சியின்றி 1 வருடமும் மற்றும் தகுதியில்லா பணி நாட்கள் 11/2012 முதல் 01/2021 முடிய மொத்தம் 1224.5 நாட்கள் இருந்ததால், மனுதாரருக்கு 01.02.2021 ல் 2 வருடாந்திர ஊதிய உயர்வுகள் வழங்கப்பட்டு, அதன் பணப்பலன் 27.03.2021 என சரியாகவே கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றும் சங்க உறுப்பினருக்கு அடுத்த வருடாந்திர ஊதிய உயர்வு 01.02.2022 ம் காலாண்டில் தகுதிகளின் அடிப்படையில் வழங்க பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், வருடாந்திர ஊதிய உயர்வு தொடர்பாக பணியாளர்களுக்கு 01.03.2021 ல் கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது என்றும், சங்க உறுப்பினர் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு உண்மைக்கு புறம்பாக பணி ஓய்வு பெற்ற பின்னர் தாவா தாக்கல் செய்துள்ளார் எனவும், மேலும் தன்னுடைய கோரிக்கை சம்பந்தமாக தான் ஓய்வு பெற்ற 31.05.2024 ம் தேதி வரை எந்த கோரிக்கை கடிதமும், சங்க உறுப்பினர் எதிர்மனுதாரருக்கு கொடுக்கவில்லை எனவும், எனவே, சங்க உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது அல்ல என வாதுரை செய்யப்பட்டது.

11. மனுதாரர்/சங்க உறுப்பினருக்கு 2012 முதல் 3% வருடாந்திர ஊதிய உயர்வும் அதற்குண்டான நிலுவைத் தொகையும் வேண்டி இந்த தாவா தாக்கல்

செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாகவும், பணியில் இருந்து ஓய்வு பெற்ற தேதியான 31.05.2024 உட்பட்ட காலம் வரை எந்த கோரிக்கை மனுவும் எதிர்மனுதாரரிடம் மனுதாரர் கொடுக்கவில்லை என்பதாகவும், எனவே, மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதுரை முன்னிலை செய்யப்பட்டது. இந்த தொழிற்தாவா நீதிமன்றத்தில் 2025 ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் சங்க உறுப்பினர் 02.02.2021 ல் நிலுவைத் தொகை வேண்டி ஒரு கடிதம் எழுதியுள்ளார் என்று குறிப்பிட்டு தொ.சா.ஆ.3 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தொ.சா.ஆ.3 ஐ வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்பதாக வாதுரை முன்னிலை செய்யப்பட்டது. தொ.சா.ஆ.3 கடிதத்தில் சங்க உறுப்பினர் எதிர்மனுதாரருக்கு அனுப்பியதற்கு எந்த சான்றாவணமும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் கோரிக்கை மனுவில் 02.02.2021 ல் கடிதம் அனுப்பியதாக குறிப்பிட்டு கூறவில்லை. 2012 முதல் சம்பள உயர்வு வழங்காததற்கு 2021 வரை எந்த கடிதமும் அல்லது கோரிக்கை மனுவும், சங்க உறுப்பனிர் எதிர்மனுதாரருக்கு அனுப்பாததற்கு எந்த விளக்கமும் முன்னிலை செய்யப்படவில்லை. இவ்வாறான நிலையில் தொ.சா.ஆ.3 வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதாகவே கருதுகிறேன். மேலும், 2012 ல் இருந்து உள்ள சம்பள ஊதியத்திற்கு இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சங்க உறுப்பினர் அமைதியாக இருந்துள்ளதால் மனுதாரருடைய மனு காலவிரையத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதாக முடிவு செய்கிறேன்.

12. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் 01.01.2013ல் வருடாந்திர ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கும் பொழுது கீழ்க்கண்ட வழக்குகள்

| SL. No. | Particulars | Date | Punishment details |
|---|---|---|---|
| 1 | G10/2012/09 | 19.11.2012 | Inc. P.P. 1 Year WCE |
| 2 | G8A/8/13 | 14.06.2014 | Inc. P.P. 6 months WOCE |
| 3 | G8A/4257/13 | 12.06.2014 | Inc. P.P. 3 months WOCE |
| 4 | G7/2355/12 | 25.06.2014 | Inc. P.P. 3 months WOCE |
| 5 | G8A/3482/16 | 12.01.2018 | Inc. P.P. 2 Years WCE |
| 6 | Non Qualification services days | 11/2012 to 01/2021 – total 1224.5 days | |

நிலுவையில் இருந்துள்ளது எனவும், மேற்கண்ட வழக்குகள் நிலுவை காரணமாக சங்க உறுப்பனிருக்கு வருடாந்திர ஊதிய உயர்வஹ நிறுத்தம் பின்தொடர்ச்சியுடன் 3 வருடமும், பின்தொடர்ச்சியின்றி ஒரு வருடமும் மற்றும் சங்க உறுப்பினருடைய தகுதியில்லா பணி நாட்கள் 11/2012 முதல் 1/2021 முடிய மொத்தம் 1224.5 நாட்கள் இருந்தது எனவும், அதனால் அந்த காலகட்டத்திற்கு சம்பள உயர்வு வழங்கவில்லை என்றும் பின்னர் 01.02.2022ல் 2 வருடாந்திர ஊதிய உயர்வுகள் கணக்கிட்டு வழங்கப்பட்டுள்ளது எனவும், எனவே மனுதாரருடைய மனு நிலைக்கத்தக்கதல்ல என்பதாக வாதுரை முன்னிலை செய்யப்பட்டது.

13. சங்க உறுப்பினர் தன்னை தொ.சா.1ஆக நீதிமன்றத்தில் விசாரித்துக் கொண்டார். அவர் தனது குறுக்கு விசாரணையின் போது எதிர்மனுதாரர் தரப்பில் சங்க உறுப்பினருக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் அனைத்தும் சரிதான் எனவும், அதனால் ஊதிய உயர்வு தள்ளிப் போனது என்றும் அதற்கு பின்னர் ஊதிய உயர்வை 01.05.2022ன் முதல் காலாண்டின் தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது எனவும், 2012ல் வழங்கி வேண்டியது 2022ல்

வழங்கப்பட்டது எனபதாகவும் எதிர்மனுதாரரின் வழக்கை ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துளள்ளார். சங்க உறுப்பனிர் எதிர்மனுதாரரின் கூற்றுக்களை ஏற்று சாட்சியம் அளித்துள்ளபடியால் மனுதாரருடைய கோரிக்கையானது நியாயமானதல்ல என்பதாக முடிவு செய்து பிரச்சனைக்கு இவ்வாறாக விடையளிக்கிறேன்.

முடிவில், தமிழக அரசாணை (டி) எண்.825 – தொழிலாளர் மற்று வேலைவாப்பு (டி1) துறை நாள். 19.11.2022ன் கீழ் எழுப்பபப்பட்ட எழுவினாவிற்கு கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது.

1. சங்க உறுப்பினர் திரு.E.வேலு என்ற நடத்துநருக்கு (பணி எண்.13220) 2012 முதல் வழங்கப்பட வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வினை முன்தேதியிட்டு 2012 முதல் 3 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கியும், அதற்கான நாளது தேதிவரை அரியர்ஸ் உடன் சேர்த்து வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதல்ல என்றும்,

2. சங்க உறுப்பினரின் கோரிக்கை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

3. வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு செலவுத் தொகையை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

(இந்த தீர்வம் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் வருடம் மார்ச் மாதம் 23ம் நாள் என்னால் நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.)

LATHA A P

Digitally signed by LATHA A P
Date: 2026.03.23 14:46:17 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**</u> :

தொ.சா.1 - திரு.E.வேலு.

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்**</u> :

- இல்லை -

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.1 | பிப்ரவரி 2021 | சங்க உறுப்பினருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கிய மாத சம்பள ரசீது. | நகல் |
| தொ.சா.ஆ.2 | 19.04.2021 | மனுதாரர் சங்கம் கோவை தொழிலாளர் அலுவலர் முன்பாக தாக்கல் செய்த 2(k) மனு ந.க.எண்.307/2021. | நகல் |
| தொ.சா.ஆ.3 | 02.02.2021 | சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பிய கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.4 | 23.02.2022 | எதிர்மனுதாரர் நிர்வாகம் 2(k) மனு ந.க.எண்.307/2021 ல் தாக்கல் செய்த பதிலுரை. | நகல் |
| தொ.சா.ஆ.5 | 21.11.2022 | ந.க.எண்.307/2021 ன் சமரச முறிவறிக்கை. | நகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

- இல்லை -

LATHA A P

Digitally signed by LATHA A P
Date: 2026.03.23 14:46:26 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.